Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞ஁ (1889) ஆனி மீ 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசூ] யாழ்ப்பாணம்:- குரோதி ளூ ஆடிமீ உ௩உ வெள்ளிக்கிழமை (7 August 1964) [இல-௩அ]

இந்துசமயம்

## மாதிரி வினுவிடைகளும் நினைவுக்குறிப்புகளும்

[ ஆசிரியர் திரு. ஆ. நவரத்தினம் அவர்கள் ]

சுருக்கமாக விடைதருக:

1. வேதமென்பதன் பொருள் யாது?

'வேதம்' என்பது அறிவின் இருப்பிடமாய நூல் எனப் பொருள்படும். இச் சொல் 'அறிதல்' என்னும் பொருள்தரும் 'வித்' என்னும் வினையடியிலிருந்து பிறந்தது.

2. வேதத்தின் பிரிவுகளெவை?

வேதத்தின் பிரிவுகள் இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்னும் நான்குமாம்

3. வேதத்தை நான்காக வகுத்தவர் யார்?

வேதத்தை நான்காக வகுத்தவர் வியாசமாமுனிவராவர்.

4. செய்யுள் வடிவிலமைந்த வேதமெது?

செய்யுள் வடிவிலமைந்த வேதம் இருக்கு வேதமாகும். -இருக்கு என்பது செய்யுள் எனப் பொருள்படும்.

5. சங்கிதை எனப்படுவது யாது?

வேதமந்திரங்களின் தொகுப்பு சங்கிதை எனப்படும்

6. சாகை எனப்படுவது யாது?

வேத மந்திரங்களை வேள்விகளில் எவ்வாறு பயன் படுத்தவேண்டும் என்று வரன் முறையாக வகுக்கப்பட்ட வழிமுறைகளே சாகை எனப்படும்.

7. வேதத்தின் இரு பெரும் பிரிவுகள் எவை?

கருமகாண்டம், ஞானகாண்டம் என்பன வேதத்தின் இரு பெரும் பிரிவுகளாகும்.

8. வேதங்கள்பொருள்நோக்கிஎவ்வாறுபிரிக்கப்பட்டுள்ளன?

வேதங்கள் ஒவ்வொன்றும் சங்கிதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதம் என அவற்றின் பொருள் நோக்கிப் பிரிக்கப்பட்டுள்ளன.

9. சாமவேத பிராமணங்களின் பெயர்களைக் கூறுக.

தாண்டிய மஹா பிராமணமும், ஷட்விம்ச பிராமணமும், ஜைமினீய பிராமணமும், தலவகாரப் பிராமணமும் சாமவேதப் பிராமணங்களாகும்.

10. யசுர் வேதம் எத்தனை வகைப்படும்?

யசுர் வேதம், கிருஷ்ண யசுரென்றும்; சுக்கில யசுரென்றும் இருவகைப்படும்.

11. உபநிடதம் என்பதன் பொருள் யாது?

உபநிடதம் என்பது, ஆன்மாவை இறைவனுக்கு அண்மையிலே கொண்டுபோய்இருத்துகின்ற மந்திரம் எனப் பொருள்படும்.

12. வேதாந்தமெனப்படுவது யாது?

வேதத்தின் இறுதிப் பகுதியாயுள்ள உபநிடதமே வேதாந்தமெனப்படும்.

13. வேதாங்கங்களெவை?

சிட்சை, வியாகரணம், நிருக்தம், சந்தஸ், சோதிடம், கற்பம் என்னும் ஆறும் வேதாங்கங்கள் எனப்படும்.

14. வைதிக சமயங்களெவை?

வைதிக சமயங்களாவன சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்பனவாம்.

15. இவை வைதிக சமயங்களெனப்படுவதேன்?

அறிவு நூலாகிய வேதத்தைத் தமக்குப் பிரமாண நூலாகக் கொண்டமையால் இவை வைதிக சமயங்களெனப்படுகின்றன. வைதிகம - அறிவு.

16. அவைதிக சமயங்களெவை?

சமணம், பௌத்தம், உலோகாயதம், மாயாவாதம் என்பன அவைதிக சமயங்களாகும்.

17. தரிசனங்களெனப்படுவன யாவை?

தரிசனங்களெனப்படுவன சாங்கியம், யோகம், நியாயம், உத்தர மீமாம்சை, பூர்வமீமாம்சை, வைசேடியம் என்னும் ஆறுமாம்.

18 தர்ம சாஸ்திரங்களை இயற்றியவர்கள் யாவர்?

மனு, யாக்ஞவல்கியர், கௌதமர், யமன், நாரதர் முதலானவர்கள் தர்மசாஸ்திரங்களை இயற்றியவர்களாவர்.

19. இதிகாசங்கள் எனப்படுவன யாவை?

இதிகாசங்கள் எனப்படுவன இராமாயணம், பாரதம், சிவரகசியம், என்னும் மூன்றுமாம்.

20. உபநிடதத்தில் கூறப்படுவன யாவை?

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

### நற்சிந்தனை

தம்மைத்தம் மாலறிந்த
சாலப் பெரியோர்கள்
தம்மையன்றி வேறென்றும்
தாங்காணுர் — பின்னைப்
பிறப்பும் இறப்புமில்லைப்
பேய்பித்தர் போல்வார்
மறப்பின்றி வாழ்வார்
மகிழ்ந்து. 1.

## அல்லைப்பிட்டி மூன்றுமுடி அம்மன்கோயில்

சென்ற 31-6 64-ல் அன்று அல்லைப்பிட்டி, மூன்றுமுடி முத்துமாரி அம்மன் கோயில் முன்றிலில் ஷ்ெ கோயிலைப் புனருத்தாரணஞ்செய்வதைப் பற்றிய ஒழுங்குகளைச் செய்வதற்கு ஒரு பொதுக்கூட்டம் ஊர்காவற்றுறை பா.உ. திரு. V, நவரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சைவசமய விரிவுரைகள் திரு. மூ, மயில்வாகனம், திரு. க. கி. நடராஜன், திரு. K.P. ஹரன், திரு. சீ. விஞசித்தம்பி முதலானவர்களால் நடத்தப்பெற்றன. கோயில் வரலாறு, அதன் பெருமை, தேவை முதலியவற்றைப் பேச்சாளர்கள் வற்புறுத்தி உரையாற்றினர். இக்கோயில் தீவுப்பகுதியில் மிகப்புராதனமானது; இதனை யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தடியில் வசிக்கும் அரசாங்க உத்தியோகம்வகித்து இளைப்பாறியிருக்கும் திரு. ச. பரமகுருநாதன் அவர்களின் முன்னோர்கள் தாபித்தனர். பண்டைக் காலத்தில் இக்கோயிலில் நித்திய நைமித்திகங்கள் ஒழுங்காக நடைபெற்று வந்தன. உரிமைக்காரர் அவ்வூரை விட்டு அயலூருக்குக் குடியிருக்க நேர்ந்தமையினலும் கோயில் நிருவாகம் கவனிக்கப்படாமையினலும் நித்திய நைமித்திகங்களும கைவிடப்பட்டுக் கோயிலும்கிலமடைந்தது, ஏறக்குறைய 13 வருடங்களுக்குமுன் அக்கிராமத்திலுள்ள சைவ மக்கள் கோயிலைப் புனருத்தாரணஞ் செய்ய வேண்டுமெனத் தீர்மானஞ் செய்து, அம்பாளை ஒரு சிறு கட்டடத்தில் பாலத்தாபனஞ் செய்து நித்திய பூசை நடைபெற ஒழுங்கு செய்தனர். ஆனல் கோயில் திருப்பணியைப் புதுக்குவதற்கு ஒரு முயற்சியும் கையாளப்படவில்லை. இப்பொழுது ஓர் ஆலயபரிபாலனசபை நிறுவப்பட்டிருக்கின்றது. அச்சபை கோயில் உரிமைக்காரராகிய திரு ச, பரமகுருநாதனுடைய உதவியுடன் கோயிற்றிருப் பணியை ஆரம்பிப்பதற் [illegible] [illegible] நடைபெற்றது திரு. ச. பரம குருநாதன் கோயில் மூலத்தானத்தைத் தன்னுடைய செலவில் கட்ட உதவி செய்வதாக அன்புடன் வாக்களித்துள்ளனரென அறிகின்ரும். அல்லைப்பிட்டி வாசிகளும் பிறவூரிலுள்ள சைவாபிமானிகளும் குறித்த கோயிலைக் கட்ட நிதிக்கு மனமுவந்து பொருளுதவிபுரிதல் சிறந்த தருமமாகும்.

கொன்றையந்தார்வேணியர்க்குக்
கோயிலபல சமைத்துப்
பொன்றினவெல்லாம்
புதுக்குவித்து — நின்ருர்
அலோகந் தன்னை
அடையார் அடைவர்
சிவலோகந் தன்னிற் சிறந்து.

திருவியலூர் — உய்யவந்ததேவநாயனுர் அருளிச்செய்த

## திருவுந்தியார்

### மூலமும் — உரையும்

[ சைவப்புலவர் திரு. இ, செல்லத்துரை அவர்கள் ]

(முற்ருெடர் —3)

இங்ஙன் இருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்
அங்ஙன் இருந்ததென் றுந்தீபற
அறியு மறிவதன் றுந்தீபற. 4.

கொ — கூ: (நான் பெற்ற பேரானந்த அறிவு) இங்ஙன் இருந்தது என்று எவ்வண்ணம் சொல்லுகேன்? (அது) 'அங்ஙன் இருந்தது' என்று உந்தீபற; (அன்றியும்) அது, (ஆன்ம போதத்தால்) அறியும் அறிவு அன்று (என்றும்) உந்தீபற.

உரை: இங்ஙன் இருந்தது என்று எவ்வண்ணம் சொல்லுகேன் — நான் ஞானசாரியரைக் கூடிப்பெற்ற பேரானந்த அறிவானது 'இப்படி இருந்தது' என்று எவ்வாறு சொல்லப்போகிறேன் ?

அங்ஙன் இருந்தது—எனக்குப் புறம்பாய் (வேருய்) நில்லாத அவ்வறிவு நான் அநுபவித்த அது போலவே இருந்தது! என்று உந்தீபற— .... ...

அது அறியும் அறிவு அன்று—அன்றியும், அழியா இயல்புடைய அந்த ஞானம அழியுந்தன்மையதாகிய ஆன்மபோதத்தினுலே அறியக்கூடிய ஒன்று அன்று; (என்றும்) உந்தீபற — ... ...

விளக்கவுரை: ஆன்ம போதம் என்றது உயிர் உணர்வை. இவ்வுணர்வு, 'இது அது உது' எனச் சுட்டி அறியும் அறிவாம்.

ஆன்ம அறிவினுல் அறியப்பட்ட சுட்டுப்பொருள் எல்லாம் அசத்தாய் அழிந்து போவனவாம. "அறிவினுல் அறிந்த யாவும் அசத்தாதல் அறிதி ...... 'மற்றது' அறிவினுக் கறியொணுதே." (சிவப். செய். 55) என்பதனுலும் இதனைத்தெளிக.

மெய்ஞ்ஞானத்தை, அது வந்தடைந்த வழி அதுவேயாய், அதனின் வேறற நின்று அநுபவிக்கலாமேயன்றிப் பாசஞான பசுஞானங்களால் அறிந்துரைக்க முடியாது, இதனைக், "கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்." என்னும் ஆன்ரோர் வாக்கானும் உணர்க.

இச்செய்யுளின் கருத்தமைந்த திருக்களிற்றுப்படியார்ச் செய்யுள்களும் பழைய உரையும் வருமாறு:

அன்றுமுதல் ஆரேனும் ஆளாய் உடனுகிச்
சென்றவர்க்குள் இன்னதெனச் சென்றதிலை—இன்றிதனை
இவ்வா றறிந்ததேன் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்
அவ்வா றிருந்த தது. 9.

["அநாதி தொடுத்துக் கர்த்தாவுக்கு ஆளாய்த் திருவருளுடனே கூடிப் பின்பு மேயத்திற் சென்றவருக்குள ஒருவரானுலும சிவாநுபவம் இப்படி இருந்தது என்று சொல்ல இதுவரையும் உவமை பொருந்தினது இல்லை ஆகையால, இப்போது இந்தச் சிவாநுபவத்தை இப்படி இருந்தது என்று எப்படிச் சொல்லப் போகிறேன்? (அது) அந்தச் சிவாநுபவம் போலவே இருந்தது.

(தொடர்ச்சி 2ம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண் புனல்வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

குரோதி ஞு ஆடி மீ
உகஉ வெள்ளிக்கிழமை

## பாலபாடப் பிரசுரம்

சிற்றறிவுடைய உயிருக்கு உறுதுணையாகவுள்ளது கல்வி. ஒரு குருடனுக்கு ஊன்றுகோல் உதவுவது போலக் காமம் வெகுளி மயக்கம் முதலியவற்றால் உழலுகின்ற ஒருவனுக்குக் கல்வியே உதவுகின்றது. கற்றற்குரிய நூல்கள் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு புருடார்த்தங்களையும் அறிவிப்பனவாக இருக்கவேண்டுமென்பதே நம் ஆன்றோர்களின் கொள்கை; நாவலர் பெருமான் இம்மரபிலேயே தனது பாலபாடங்களை எழுதி வெளியிட்டனர். 'இளமையிற்கல்வி சிலையிலெழுத்து' என்ற வாக்கின்படி முற்காலத்தில் ஆசிரியர்கள நாவலர்பெருமானுடைய பாலபாடங்களைச் சிறுவர்களுக்குக் கற்பித்து அவற்றின் உண்மைகளை அவர்கள் உள்ளத்தில் பதியச்செய்து, அவர்களைச் சான்றோராக்கினர்கள். நாவலர் பெருமானுடைய பாலபாடங்கள்இப்பொழுது ஒருபாடசாலையிலும்கற்பிக்கப்படுவதில்லை. பிற்காலத்தில் பிறரால் அவருடைய பாலபாடங்களின் முறையைப் பின்பற்றி எழுதப்பட்ட பாலபாடங்களே பாடசாலைகளில் உபயோகிக்கப்பட்டன. அரசாங்கம் பாடசாலைகளுக்கு நன்கொடை வழங்கும் முறை ஏற்பட்ட பின் அரசாங்கத்தாரால் அங்கீகரிககப்பட்ட பாலபாடங்களே பாடசாலைகளில் உபயோகிக்கப்படலாயிற்று. பாலபாடங்களைப் பிரசுரஞ் செய்பவர்களும அவ்விதிகளுக்கிணங்க அவற்றை வெளியிட்டனர். சமயச் சார்புள்ள சபைகளும், புத்தக வெளியீட்டுச் சபைகளும், தனிப்பட்டவர்களும் இக்கடமையைப் புரிந்து வந்தனர். அவ்வாருக வெளிவந்த பாலபாடங்களே இற்றைவரை பாடசாலைகளில் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. இனிமேல் அரசாங்கம் பாலபாடங்களுட்பட எல்லாப் புத்தகங்களையும் எழுதுவித்துப் பிரசுரஞ் செய்து வழங்கத் தீர்மானித்துள்ளது. அரசாங்கத்தினுடைய இத்தீர்மானம் தமிழ்மொழி வளர்ச்சிக்கும அறிவு வளர்ச்சிக்கும் சாதகமாகவிராது. அரசாங்கம் பாடசாலைகளைத் தேசியமயமாக்கியபின் கல்வியின் தரம் குன்றிவிட்டது. பாலபாடங்களையும் தேசீயமயமாக்குவது கல்வியின் தரத்தை மேலும் குறைக்க ஏதுவாகும்.

பாலபாடங்களில் அடங்க வேண்டிய விஷயங்கள் பதிப்பிக்கும் முறை, சித்திரங்கள் முதலியன அரசாங்கமே வகுத்து உதவும். இவ்விதமான முறையில் தயாரிக்கப்படும் பாலபாடங்களை உபயோகிக்கும் சிறுவர்களுடைய சிந்தனைசக்தி அறிவு விரும்பிய அளவுக்குத் தேர்ச்சியடையா. பாலபாடங்கள் பிள்ளைகளுடைய சூழல் பாரம்பரியம் சமயம் முதலியவற்றை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட வேண்டும். இவற்றுக்குரிய விபரங்களைப் பெறுவதில் அரசாங்கம் பிழைக்க நேரிடும். அவற்றைத் திருத்தமாகக் காட்ட வல்லவர்கள் பிள்ளைகளுடைய பெற்றாரும் ஆசிரியர்களுமே யாவர். பாடசாலைகளை அரசாங்கம் தேசிய மயமாக்கிய பின் ஆசிரியர்கள் அரசாங்கத்துக்கு அடிமைகளாகிவிட்டனர். அதன் காரணமாக அரசாங்கம் பிரசுரஞ் செய்யும் பாலபாடங்களிலுள்ள தவறுகளை எடுத்துக் காட்ட அவர்கள் அஞ்சுவார்கள். இவ்வாறான நிலைமையில் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சியின் பொருட்டு அரசாங்கம் பாலபாடங்களைப் பழைய முறையில் பிரசுரஞ் செய்ய அநுமதிப்பதே பிள்ளைகளுக்கு நன்மையைப் பயக்கும். அவ்வாறு செய்யுங் காலத்தில் பாலபாடங்களின் கிரயங்களைக் கட்டுப்படுத்தலாம். அரசாங்கம் இவ்விதமாக நடக்க இணங்காவிட்டால் நாட்டிலுள்ள பெற்றார் சங்கங்கள் பாலபாடங்களைப் பிரசுரஞ் செய்யும உரிமையை நன்ருக இயங்குகின்ற சபைகளுக்கு உதவும்படி அரசாங்கத்தைக் கேட்கலாம். பஸ்வண்டிகள், தொழிற்சாலைகள், வங்கிகள்போன்ற தாபனங்களைத் தேசியமயமாக்குவதுபோல, அறிவையும் தேசீயமயமாக்கத் துணிவது பொருந்தாத காரியம். அறிவு ஒரு சித்துப் பொருள். சடப்பொருளல்ல. அது விலைமதிப்பில்லாதது. அறிவையடையும் மார்க்கத்தை வினையினீங்கிய முனிவர்கள் எங்களுக்கு வகுத்துள்ளார்கள். அவ்வழியிலேயே நாவலர் பெருமான் பாலபாடங்களை எழுதி உதவினர்கள். மூக்குணங்களுக்கும் ஐம்புலனுக்கும் அடிமையான மக்களால் அறிவை வழங்கும் வழியை வகுக்க முடியாது. ஒரு நாட்டுக்குச் சிறப்பையளிப்பவர்கள் அறிவுடைய மக்களே. ஆகையினல் இவற்றையெல்லாம் நன்கு சிந்தித்து நமது நாட்டு மக்கள் அரசாங்கம் செய்துள்ள இத்தீர்மானத்தைத் தவிர்க்கக் கூடிய வழிவகைகளைக் கையாள்வார்களாக.

# குடிகெடுக்கும் குடியும்-

## அதனை

# ஆதரிக்கும் அரசாங்கமும்

★

"என்னதம்பி, ஒருமாதிரியிருக்கிருய்? யாருக்குச் சுகமில்லை?

"அம்மாவுக்குச் சுகமில்லை. ஒருமாதமாய் இங்கே கொண்டுவந்து வைத்திருக்கிறோம்"

என்ன வருத்தம்?

அதுதான் எனக்குந்தெரியவில்லை.

"அப்பாவுக்கு என்ன வேலை தம்பி"

"அவர் 'வான்' ஓடுகிருர்

நீ எந்த வகுப்பில் படிக்கிருய்".

பையன் சிறிதுநேரம் பேசாமல் இருந்துவிட்டு, நான் படிப்பை விட்டுவிட்டேன்" என்ருன்.

"ஏன் தம்பி என்ன காரணம்?"

"அப்பா உழைக்கிற காசெல்லாம் குடிக்கிறதுக்கே சரியாயிருக்கும். அடி உதையைத் தவிர, எங்களுக்கு ஒரு சதமும் கொடுப்பதில்லை. அதனுல்தான் அம்மாவுக்கும் இந்த வருத்தம் வந்தது".

"இப்பொழுது நீ என்ன செய்கிருய் தம்பி".

"நான் சுருட்டு வேலைக்குப் போகிறேன்".

மேற்கண்ட உரையாடல் ஓர் மருத்துவ மனையில் நடைபெற்றது. எனக்கும் பன்னிரண்டு வயசுப் பையன் ஒருவனுக்கும் நடைபெற்றது.

பையன் படிப்பை மறந்தது எதனுல்? தந்தை கடமையைத் துறந்தது எதனுல்? தாய் மருத்துவ மனையைத் தஞ்சம் புகுந்தது எதனுல்? அந்தக் குடும்பம் அமைதியை

புலவர்
"தமிழ்மாறன்"

இழந்தது எதனுல்? கொஞ்சமாவது சிந்தித்துப் பாருங்கள்! குடியெனும் தாசி அக்குடும்பத் தலைவனிடம் நுழைந்ததாலன்ருே இவ்வளவும் ஏற்பட்டது, இதுமட்டுமா? இன்னும் எத்தனை குடும்பங்கள் இவள் நுழைவால் அல்லற்படுகின்றனவோ? அமைதியை இழந்து தவிக்கின்றனவோ? அறியோம்! அறியோம்!!.

இவள் நுழைவால் அறிவு மறைகிறது. அறிவு மறையவே சிந்தனைசக்தி குறைகிறது. அது குறையவே குற்றங்கள் அதிகரிக்கின்றன. அவை அதிகரிக்கவே நாட்டில் அமைதி அழிகிறது. அமைதி அழியவே துன்பம் எழுகிறது. இதனுலன்ருே சான்ருேர்கள் இவளை ஒதுககினர்; வெறுத்து விரட்டினர்.

இந்த உண்மையை உணர்ந்துகொண்ட இந்தியா மதுவை ஒழிப்பதில் ஓரளவுக்கு வெற்றி கண்டது. சட்டமூலம் விரட்டியடித்துவிட்டது. சமூதாயத்தில் சில இடங்களில் விரட்ட முடியவில்லைத்தான். அதுவும் எத்தனை நாளைக்கு? மழை போனதும் தூவானம் சிலமணி நேரங்களில் அதைத் தொடர்ந்து போவதுபோல் அதுவும் நாளடைவில் அற்றுப்போய்விடும்.

இங்கோ எதிர்மாருக நடக்கிறதே! குடியை ஒழிப்பதற்குச் சட்டம் கொண்டுவராமல் குடியை வளர்க்கும் சட்டங்களைக் கொண்டுவருகிருர்களே!! கொண்டுவந்து நாட்டைக் குடிக்கவராக்குகின்றார்களே!!

"கள்ளுக் கொட்டில்கள் எல்லா வுசதிகளையும் கொண்டுள்ளதாய் இருக்கவேண்டும். இங்கே வருபவர்கள் உட்கார்ந்து குடிப்பதற்கு ஆசனங்கள் இடப்பட்டிருக்க வேண்டும்" இப்படிப்பட்டதொரு உத்தரவை இலங்கை அரசாங்கம் பிறப்பித்திருக்கிறது.

அமைதிக்கு அடிகோலும் உத்தரவுகளை, ஆக்க வழிப்படுத்தும் உத்தரவுகளை, அறிவை வளர்க்கும் உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டிய அரசாங்கம் இப்படிப்பட்ட கீழ்த்தரமான அமைதிக்கு உலைவைக்கக்கூடிய உத்தரவுகளைப் பிறப்பிப்பது வேடிக்கையாக இருக்கிறது. அதைவிட வேடிக்கை ஊர் காவல் துறையினர்(பொலிஸ் இலகா) அதை ஆதரித்திருப்பதுதான்.

குடும்பத் தலைவன் குடியை ஆதரித்தால் குடும்பமதிப்பை இழப்பான்; தலைவன் ஆதரித்தால் தன்னுட்டு மதிப்பை இழப்பான். அரசாங்கம் ஆதரித்தால் அண்டை நாடுகளின் ஆதரவை இழக்கும்.

"உண்ணற்க கள்ளை உணிலுண்க
சான்ருேரால்
எண்ணப் படவேண்டா தார்".
(திருக்குறள் 922)

## திருவுந்தியார் (மூலமும்—உரையும்)

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

இதனுள், சிவாநுபவத்துக்கு வேருேர் உவமையும் சொல்லக்கூடாது என்பது கண்டுகொள்க."]

ஒன்றுங் குறியே குறியாத லால்அதனுக்
கொன்றுங் குறியொன்றி லாமையினல் — ஒன்ருே(டு)
உவமிக்க லாவதுவும் தானில்லை ஒவ்வாத்
தவமிக்கா ரேயீதற்குச் சான்று. 10.

["நேயத்தைப் பொருந்தும் முறைமையே அநுபவ உண்மை ஆதலால், அந்த அநுபவத்துக்குப் பொருந்தும் அடையாளம் இல்லாதபடியினலே ஒரு பொருளோடு உவமைபண்ணிச் சொல்லவும்படாது; தவத்தினலே ஒப்பற்ற பெரியோர்களே இந்த அநுபவத்துக்குச் சாட்சியாவர்.

இதனுள் அநுபவத்தைத் தவத்தினலன்றிக் காணப்படாது என்பது கண்டுகொள்க."]

—தொடரும்.

# 'காதற்றவூசியும் வாராது காணுங் கடைவழிக்கே'

## துறவுக்கு இவ்வாக்கியமே துணை

[24-6-64-ல் அன்று சைவபரிபாலனசபையாரால் நடத்தப்பட்ட பட்டினத்தடிகள் குருபூசையிலன்று திரு. க. சொக்கலிங்கம் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்].

பட்டினத்தடிகள் காவிரிப் பூம்பட்டினத்தில் சிவநேசருக்கும் ஞானகமலாம்பிகைக்கும் புத்திரராக அவதரித்தார். செல்வக் குடும்பத்தில் பிறந்த இவருக்குத் திருவெண்காடர் எனப் பெயரிட்டனர். பெற்ருேரின் தொழிலாகிய வியாபாரத்தையே இவரும் மேற்கொண்டார் திருமணம் செய்த இவருக்கு மருதவாணன் பிறந்தார். சில காலத்தின் பின் மருதவாணர் இறந்துவிட்டதும் இவர் ஓர் வளர்ப்பு மகனை எடுத்து வளர்த்தார். சிலகாலம் செல்ல அவரும் "காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே"' என்னுஞ் சொற்ருெடரை ஒரு ஏட்டில் எழுதிவிட்டு மறைந்து விட்டார். அன்றிலிருந்து இவருக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது

இருவினையே பிறவிகளுக்குக் காரணம் என்றறிந்து இவர் துறவியானர். "ஊரும் சதமல்ல உற்ருர் சதமல்ல" என்று புறப்பட்ட இவரால் தாய்ப் பாசத்தை வெல்ல முடியவில்லை. எங்கெல்லாம் திரிந்தாலும் இறுதியில் வந்து தாயாரின் ஈமக்கடனைச் செய்தார். காஞ்சிபுரம் கோயிலில் நிட்டையில் இருக்கும்பொழுது அரண்மனையில் களவாடிய கள்வர் இவர் கழுத்தில் ஒரு மாலையைப் போட்டுவிட்டுச் சென்றனர். காவலரால் பிடிபட்ட இவரை அரசன் கழுவிலேற்றும்படி உத்தரவிட்டான். ஆனல் கழுமரம் தீப்பற்றி எரிந்தது. இவரின் பெருமையைக்கண்டு அரசனும் சன்னியாசியானர். வண்ணரச் சிறுவர்களுடன் கடறகரையில் விளையாடும்பொழுது சிவலிங்க வடிவானுர்.

இவருடைய காலம் சமயகுரவர் நால்வருக்கும் பிறபட்டது. இவரது பாடல்கள் 11-ம் திருமுறையில் அடங்கும். இவரது பாடல்களில் சைவ சித்தாந்தக் கொள்கைகள் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. இவரது பெயரில் இருவர் வாழ்ந்து பாக்கள் இயற்றி இருக்கவேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இவரது வாழ்க்கையைப்பற்றிப் பலவித கர்ண பரம்பரைக் கதைகள் நிலவுகின்றன.

## நல்லூரில் தங்கரதம்

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் புதுத்தேர் சிறந்த ஆசாரியாரால் துரிதமாகச் செய்யப்படுகின்றது. இந்த ரதத்தின் சில பாகங்கள் மீது தங்கத் தகடுகள் பதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. இப்புதிய தேர் வெள்ளோட்டம் 20-8-64 வியாழக்கிழமை நடைபெறுமெனவும் அறிகின்ருேம்.

## இவ்வாரம் உங்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தியாக இருக்கும், நிலங்களினல் நன்மை உண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி

புதுக்கருமங்களுக்கு முதலிரு நாட்களும் ஏற்றவை செவ்வாய் பிற்பகல், புதன் வியாழன் கவனமாகக் கழிக்கவும். எஞ்சிய காலம் திருப்தி,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.
1, 2, 3ம் பாதம்

உட்பகைவர்களால் துன்பம், உறவினரால் பகையும் மனச்சஞ்சலமும் உண்டு. தாயாரின் தேகநிலையில் திருப்தியில்லை. வியாழன் வெள்ளி சனி முற்பகலைக் கவனமாகக்கழிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய புராண விரிவுரை விழா

நிகழும் குரோதிஞு ஆடிமீ 28 (12-8-64) புதன்கிழமை மாலை 5 மணியளவில் வில்லூன்றி விநாயகராலய மண்டபத்தில் கடந்த இருமாத காலமாக நடைபெற்றுவரும் பெரிய புராண விரிவுரையில், சிறந்த பகுதிகளிலொன்முன திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் புராணப் பூர்த்தியாகிய திருநல்லூர்ப் பெருமணத்தில் திருஞானசம்பந்தர் ஏனைய அடியார்களுடன் சோதியிற்புகுந்து சிவானந்தம்பெற்ற பாகம் நடைபெறும். முத்தமிழ்மணி பிரம்மஸ்ரீ. C. S. S. மணிபாகவதர் அவர்கள் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஆவரங்கால் வலிகாமம் கிழக்கு ஐக்கிய விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம் தற்போது ஆவரங்கால் பலநோக்குக்

வழக்கு இல. M. B. 5824 கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

எதிராக — வழக்காளி

புத்தூர் மேற்கு
1. சரவணமுத்து சுந்தரம்பிள்ளை
2. சரவணமுத்து கந்தையா
— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 5824-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1964-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 19-ந் திகதி (19-9-64) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—ரூபா 1316-ம், 2-7-63 தொடக்கம் 30-1-64 வரைக்கும் ரூபா 1091-50 சதத்துக்கு 4 வீத வட்டியும் அதன்பின் முழுத்தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றுக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 235-05 சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி, அச்சுவேலி கோயிற்று நவக்கிரி இறை, "வேட்டைக்காரன் பதி" (Veddaikkaran Pathi) நிலப்பரப்பு 4. வீடும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு இளையதம்பி பெண் லெட்சுமிப்பிள்ளையின் ஆதனம். வடக்கு சின்னையா ஆறுமுகத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு வீரகத்தி பெண் சிதேவனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை. கிழக்கிலுள்ள கிணற்றில் தண்ணீர்ப்பங்குடனும், வழிவாய்க்கால் உரிமையுடனும். இதடங்கலும்.

தபாற்கந்தோரடி,
நவாலி, மானிப்பாய்,
20-7-64.
M 114 24-7-64,

செ. பாண்டித்துரை;
கொமிஷனர், விலைமதிப்பாளர்
Commissioner of Sales. Valuer,
& Licensed Auctioneer.
M 130 8-8-64,

## சுந்தரமூர்த்திநாயனர் குருபூசை

உ

—0—

நாள்; ஆடி ௩0௨ (14-8-64) வெள்ளிக்கிழமை

இடம்: சைவபரிபாலன சபை, நாவலர் மண்டபம்.

### நிகழ்ச்சிகள்:

மு. ப. 9—பி ப 1. சிவபூசை (சிவபூஜா மண்டபம்)
கடவுளாராதனை, புராணபடனம் — பெரியபுராணம்
வெள்ளானைச்சருக்கம்.

விரிவுரைக்கூட்டம்:

தலைவர்: பண்டிதர், பிரம்மஸ்ரீ வ மு. இரத்தினேசுவரஐயர் அவர்கள்

திருமறையோதல் – நாவலர் சைவப்பிரகாசவித்தியாசாலை மாணவர்

சுந்தரர் அவதாரம்
சித்தாந்த பண்டிதர். திரு.வே. சோமசுந்தரம் அவர்கள்

சுந்தரர் செந்தமிழ் - சைவப்புலவர். திரு. வ. கந்தசாமி அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம் 10-8-64.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

## (இந்துசமயம்) மாதிரி வினுவிடைகளும் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இறைவன் ஆன்மா என்னும் இரு பொருள்களைப் பற்றியும், இறைவனுடன் கலந்து வீடுபேற்றைப் பெறும் வரை ஆன்மா கொள்ளும் நிலைகளைப்பற்றியும், உலகத் தோற்ற ஒடுக்கங்கள்பற்றியும் இன்னும் பல தத்துவ விசாரணைகள்பற்றியும் உபநிடதத்தில் கூறப்படுகின்றன.

### நினைவுக் குறிப்புகள்.

வேதம் இறைவனுல் அருளப்பட்டது. அறிவின் இருப்பிடமாயுள்ளது. வியாச முனிவரால் இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என நான்காக வகுக்கப்பட்டது. நால் வேதங்களும் பொருள்நோக்கி சங்கிதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதம் எனறும், தரம் நோக்கி கருமகாண்டம், ஞானகாண்டமென்றும் தனித்தனி பிரிவுபட்டுள்ளன. வேதத்துக்கு அங்கங்களாயுள்ளவை வேதாங்கங்கள். ஒவ்வொரு வேதமும் பற்பல சாகைகளையுடையது. இருக்கு வேதம் 21 சாகைகளையும் யசுர்வேதம் 101 சாகைகளையும், சாமவேதம் 1000 சாகைகளையும் அதர்வவேதம் 9 சாகைகளையும் உடையன.

தர்மசாஸ்திரங்கள் உலக நடைமுறைக்கு வேண்டிய நீதிகளை எடுத்துக் கூறுவன. வேதப் பொருளுக்கு மாறுபடாதன. பல முனிவர்களால் பலகாலம் தவமிருந்து காணப்பட்டன. இத் தர்ம சாஸ்திரங்கள் ஸ்மிருதிகள் எனவும்படும். [ஸ்மிரு - நினைத்தல்; முனிவர்களால் நினைக்கப்பட்டவை எனப் பொருள்படும்].

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 5511

செபஸ்தி சைமன் கரையூர் யாழ்ப்பாணம்
— வழக்காளி

எதிராக

1 சூசை பறனுந்தும் பெண்
2 ஆனுசியும்
3 சூசை பறனுந்து மகள் ரோசமலரும் கரையூர் யாழ்ப்பாணம்.
4 P. கந்தன், கரையூர் யாழ்ப்பாணம். — எதிராளிகள்

[illegible]ழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்[illegible] M B 5511-ம் இலக்க வழக்[illegible] எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1964-ம் ஞு புரட்டாசி மீ 5-ந் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- மூதல்வட்டி ரூபாய் 3952-ம் 23-3-63 தொடக்கம் 11-2-64 வரைக்கும் ரூபாய் 3000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 287 77½ம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று கரையூர் இறை "பேயன் தலைமடைப்புலம்" நிலப்பரப்பு இரண்டு குளி பன்னிரண்டரையும் (நில. பர. 2 குளி 12 1/2 வீடும். குசினி, கிணறு மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு பிலிப்பையாவினுதனம், வடக்கு ஒழுங்கை. மேற்கு லயனல் நிசவீரசிங்கிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு P. W. D. கந்தோராதனம், இதடங்கலும். பதிவு D 229/250.

அ. வெற்றிவேலு
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்,
M. 134 8-8-64.

## இவ்வாரம் 9-8-64 — 15-8-64

# உங்கள் பலன்?

[ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தேகநிலை திருப்தியாக இராது. தொழிலில் கவனமாக இருக்கவும். உட்பகைவர்களால் துன்பம். சனி பிற்பகலைக் கவனமாகக் கழிக்கவும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

சொந்தச் செயல்களில் முன்னேற்றம், ஆரம்பத்தில் துன்பமும் பின் இன்பமும் உண்டு உட்பகைவர்களில் கவனமாக இருக்கவும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், [illegible]ம் பாதம்.

பொருள்நிலையில் திருப்தி. புதுச் செயல்கள் தாமதத்துடன் நிறைவேறும். செலவு அதிகம், வீட்டு விஷயங்கள் திருப்தியாக இரா.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

மனச்சாந்தி இல்லை. அனுகூலத்திற்கு அதிக உழைப்புத் தேவை. பொருள் வரவு உண்டு.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

தொழில் முறையில் மாற்றம் உண்டு. வீட்டு விஷயங்கள் திருப்தியாக இரா. நிலங்களால் வருவாய் உண்டு, சமூகப் புகழும் வெற்றியும் உண்டு.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

சத்துருஜெயம், புகழ் உண்டு. தொழிற் துறையில் ஆதாயம். சொந்தக் கருமங்கள் பிரச்னைகள் தீரக்கூடும்.

**துலாம்,** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

தேவையில்லாத கண்டனங்களும் அபச்சாரங்களும் நிகழும். தந்தையாரின் உறவினரால் துன்பம், தேகநிலை திருப்தியாக இரா.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

மனநிலை திருப்தியாக இருக்கும், புதுக்கருமங்கள் தாமதத்துடன் நிறைவேறும். வீட்டில் சச்சரவு உண்டு. தந்தையரின் தேக நிலையில் திருப்தியில்லை.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

நீ னைத்தபடி கருமங்கள் நிறைவேரு உட்பகைவர்களால் தொந்தரவு, விவசாயத்தால் ஆதாயம்,

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்

ஞாயிறு திங்களைக் கவனமாகக் கழிக்கவும். எஞ்சிய காலம் திருப்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## COMMISSION SALE
## விற்பனவு விளம்பரம்

—:—

பருத்தித்துறைடிஸ்திறிக்கோட்டு வழக்கு இல. 7494

வழக்காளி 1. N. கணபதிப்பிள்ளை இராசையா 2. பெண் சிவகாமிப்பிள்ளை பருத்தித்துறை

எதிராக

1. ஆறுமுகம் இராசையா
2. பெண் மீனுட்சுப்பிள்ளை
பருத்தித்துறை.

மேற்குறித்த இலக்கவழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் காணும் ஆதனம் 1964 ஆ புரட்டாதி மீ 19ந் தேதி சனிக்கிழமை பகல் 9 மணியளவில் குறித்த ஆதனவிடமாயிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று, பருத்தித்துறை வென்றிபாகுதேவன் குறிச்சியிறை "மாகாளி தேவன் சீமா" நில. 5 7/8 ஷி வீடு 1. ஷி தோட்டம் 1 ஷி வீடு 1. இவைகளில் வடக்குப் புறமாக நி. பர. 4 குளி 6 7/8 இது யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 2846 ம் இலக்கப்பிரிவிடல் வழக்கின் கடைசித் தீர்வையுடன் அணைக்கப்பட்டதும் 1902ம் ஆ கார்த்திகை மீ 20 ந் தேதி உலாந்தா மேஸ்தர் கதிர்காமர் கணபதிப்பிள்ளையால் விந்தாரிக்கப்பட்ட 509 ம் இலக்கப்படத்தின்படி நி பர 3 குளி 14½ இதில் வடமேற்குப் புறமாக 6¼ குளி நீக்கி மிகுதியில் 10 7/8 குளி. கல் வீடும் தென்னைகளும். எல்லை கிழக்கு ஒழுங்கையும்வயிரவிப்பிள்ளை பெண்வள்ளிப்பிள்ளைக்குடையவாதனம்.வடக்குவயிரவிப்பிள்ளை பெண் வள்ளிப்பிள்ளைக்குடையவாதனம். மேற்கு சிதம்பரப்பிள்ளை செல்லையாவுக்குடைய வாதனம். தெற்கு தம்பிப்பிள்ளை பெண் சின்னப்பிள்ளைக்குடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட யாவையும்.

| | |
|---|---|
| தீர்வைத் தொகை | 1845-00 |
| வட்டி 12 வீதம் 1500 ரூபாவுக்கு 19-7-62 — 14-2-63 வரை | 105-00 |
| வட்டி 5 வீதம் 1950/- ரூபாவுக்கு 15-2-63 இது வரைக்கும் | 117-74 |
| | 2067-74 |
| செலவு பணம் | 230-95 |
| | 2298-69 |

கா. முத்துக்குமாருஐயர்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer.
சந்திநிலேவல்,
பருத்தித்துறை. 2-8-64
M 129 7-8-64

## தருமம் என்று ஒரு பொருள்

தருமத்தைப்பற்றி எவ்வளவு உரத்துக் கூறினுலும் ஒருவரும் அதைக் கவனிப்பதில்லை. அர்த்தம் காமம் (பொருள் இன்பம்) என்னும் இரு நிலைகளும் இயல்பாகவே ஒருவனுக்குக் கிடைக்கும்போது முதற்கண் உள்ளதாகிய தருமம் கவனியாமல் விடப்படுகிறது. தருமத்தைக் கடைப்பிடிப்பதனுல் மனிதன என்னும் தன்மை அவனில் பிரகாசமடைகின்றது. கவலை, அச்சம், மகிழ்ச்சி முதலிய உணர்ச்சிகளால் தருமவழியினின்றும் விலகக்கூடாது. உணர்ச்சிகள் நிலையற்றவை தருமம்நிலையானது.

—மகாபாரதம்.

## தாராபிஷேகத்தின்பின் மழை

—0—

சுமார் ஏழுமாதங்களாக மழையில்லாமையால், கேதீச்சரத்தில் வசிக்கும் அடியார்களும், ஆலய திருப்பணிச்சபையாரும் கேதீச்சரப் பெருமானுக்கு 10-6-64-ல் அச்சுவேலி சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள் மூலமாக ஆகம முறைப்படி தாராபிஷேகத்தையும், சங்காபிஷேகததையும் செய்வித்தார்கள். இருபத்தொரு நாட்களுக்குத் தாராபிஷேகம் நடைபெற்றது. 26-ந் திகதி முதல் நல்ல மழை பெய்கின்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 4931

1. வில்லியம் துரைரெத்தினமும் பெண் 2. மேரிகொன்ஸ்ரன்ஸ்சும் இல: 1 B, வைத்திய பிளேஸ் டெகிவல
வழக்காளிகள்.

எதிராக

யோசேவ் சாமுவேல் நவரெத்தினம், மானிப்பாய்,
—எதிராளி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4931 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணியை 1964 ம் ஞு ஆவணி மீ 29 ம் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை: மூதல்வட்டி ரூபா 12,663 ம், 11-7-62 தொடக்கம் 25-7-63 வரைக்கும் ரூபா 10,000 க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 412-41ம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக வலிகாமம் மேற்குப் பகுதிமானிப்பாய்க்கோவிற்பற்று மானிப்பாய் இறை நல்லிங்கன் தோட்டம் நல்லான் தோட்டம் மயிரிப்பளையும் மறுபிரிவுகளும் நில பர 4 குளி 16, 35/100. கல் வீடும் கிணற்றுப்பங்கும். மற்றுமதற்குச்சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு R. பொன்னம்பலம் பெண் மேரி சின்னத்தங்கத்தின் உரிமைக்காரரினுதனமும்.வடக்கு பொன்னம்பலம் பெண் சின்னத்தங்கத்தின் உரிமைக்காரரினுதனமும். மயிலு பெண் நாகம்மாவினுதனமும். மேற்கு மயிலு பெண் நாகம்மாவின் ஆதனமும் முருகர் மதியாபரணத்தினுதனமும். தெற்கு ஒழுங்கையும்கையொழுங்கையும்.

அ வெற்றிவேலு,
கொமிஷனர்.
19. வேம்படி வீதி.
யாழ்ப்பாணம்,
M 133 7-8-64

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
கந்தர்மடம் யாழ்ப்பாணம்
அருணசலம் பதஞ்சலிகாதன்
—வழக்காளி

எதிராக

திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்
1. பொன்னம்பலம் கந்தசாமியும்
2. பெண் மனோன்மணியும்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M,B, 4942-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகள் 1964-ம்ஞூ ஆவணிமீ 29உ சனிக்கிழமை மூற்பகல் 10 மணிக்கு அந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 6790/- இன்னும் ரூபாய் 5000-க்கு 19-7-62 தொடக்கம் 4-7-63 வரைக்கும் 10% வீத வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 399-26½ சதமும்,

காணிகளின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் திருநெல்வேலி நல்லூர் கோவிற்பற்று 'விஸயகோன் கலட்டி" அல்லது "கலட்டி" பர, நில, இலா, 2' குளி 8/10 கல்வீடு, கிணறும் அதைச் சேர்ந்தவையும். எல்லை கிழக்கு கார்த்திகேசு சின்னத்தம்பி பெண் அன்னபூரணத்தினுதனம், வடக்கு கைலாசம் பெண் ஆச்சிக்குட்டிக்கும் மற்றவர்கட்கு முரியவாதனம், மேற்கு சிவப்பிரகாசம் பெண் [illegible] செகசோதியினுதனம், தெற்கு ஒழுங்கைக்குச் செல்லும் வழியும் கை ஒழுங்கை முகப்பும். இதடங்கலும் வீடு கிணறு செய்பயிர்களுடனும் கை ஒழுங்கை பாவிப்புரிததும்.

2, "விஸயகோன் கலட்டி" பர, நில, இலா, 2, 10 3/16 குளி இதடங்கலில் 135 சதுர அடி அடங்கியுள்ள இழக்கு மேற்காக 5 அடி அகலமும் வடக்குத் தெற்காக 27 அடி நீள ஒழுங்கை, இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கை முகப்பும் 4 அடி அகலமுள்ள கையொழுங்கையும், வடக்கு மேற்படி இரண்டாம் எதிரியினுதனம், மேற்கு மிகுதி ஆதனம், தெற்கு கை ஒழுங்கை.

செ. விசாகரெத்தினம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
133 பருத்தித்துறை ரோட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்
22-7-64,
M 123 7-8-64

## கோட்டு விற்பனவு

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
வழக்கு இலக்கம் M.B, 5100
நுணுவில் மேற்கு
1. S. செல்வராசாவும் மனைவி
2. பொன்மணியும்
—வழக்காளிகள்

எதிராக

நுணுவில் மேற்கு
1. சாமூவேல் சீவரெத்தினம் மூத்தையாவும் மனைவி
2. லில்லி பவளமும்,
—எதிராளிகள்.

இவ்வழக்கில் எனக்குக்கிடைத்த உத்தரவின்படி கீழ்காணும் 1-ம் ஆதனம், 2-ம் ஆதனம் முறையே 1964-ம்ஞூ செப்டெம்பர்மீ 5உ (5-9-64) சனிக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கமும், பிற்பகல் 3 மணி தொடக்கமும் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 7116/- 24-9-62 தொடககம் 4-6-63 வரைக்கும் ரூபா 5000-க்கு வருடமொன்றுக்கு 8% வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை வருடமொன்றுக்கு 5%வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 414-05 சதமும் இதில் கட்டிய ரூபா 200 குறைய.

ஆதன விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி. சாவகச்சேரிக் கோவிற்பற்று நுணுவில் இறை "கலட்டி வளவு" நிலப்பரப்பு 9. இதில் மேற்குப்பக்கமாக [illegible] பட்ட நிலப்பரப்பு 4, இரு கல் வீடுகள் குசினி, பயிர்களும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும். இதற்கு எல்லை இழக்கு முழுக் காணியில் புறநீங்கலாக விடப்பட்ட பகுதி ஆதனம் S. S, மூத்தையாவுக்குரியது. வடக்கு S, S. மூத்தையாவினுதனம். மேற்கு விசுவநாதர் சுப்பையாவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம், தெற்கு யாழ் - கண்டி ரோட். பதிவு F 306/226,

2, வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக பச்சிலைப்பள்ளி கராச்சிப்பகுதி, பரந்தன் கோயிற்பற்று பெரிய பரந்தன் இறை "பெரிய பரந்தன் காடு" 8 9/10 ஏக்கர். இது மாபெரும் அளவையாளர் அவர்களால் (Surveyor-General) தயாரிககப்பட்ட 3-ம் இலக்கப்படத்தில் 1. S. P. யில் துண்டு lot) 42 C என விபரமாக விளக்கப்பட்டிருக்கிறது. இதற்கு எல்லை இழக்கு பழைய இணுக்காய் ரோட், வடக்கு தண்ணீர் வாய்க்காலும், ஒழுங்கையும், மேற்கு S. காளிராசாவினுதனம், தெற்கு M.M. அப்புகாமியினதும், V. கந்தையாவினதுமாதனங்கள், இது முழுவதும், பதிவு B 48/248.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்.
ஏலவிற்பனவாளரும்,
விலைமதிப்பாளரும்,
643 காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம். 18-7-64,
M 126 7-8-64.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

சிறுப்பிட்டி ஐக்கிய விளைபொருள் உற்பத்திவிற்பனவுச் சங்கம் பதிவுஇல J 1234. அதன் தலைவர் சிறுப்பிட்டி வல்லிபுரம் மாணிககம் காரியதரிசி அவ்வூர் பூததம்பி சிவசுப்பிரமணியம் ஆகியவர்கள் மூலம் -வழக்காளிகள்.

இல. M B 5308

எதிராக

1. சிறுப்பிட்டி சுப்பர் ஆசைப்பிள்ளை
2. ஷெ ஊர் சின்னப்பிள்ளை சுப்பர் கைம்பெண் செல்லம்மா.
-எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 5308 ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1964ம்ஞூ புரட்டாதிமீ 5 ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்து மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்றுபிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: மூதல்வட்டி ரூபா 1239-00ம் ரூபா 1400க்கு 5-1-63 தொடக்கம் 7-8-63வரை 4 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 260-80 சதம் - இதில் ரூபா 70 கொடுபட்டது.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர்க்கோயிற்பற்று சிறுப்பிட்டி இறை "தம்பனை" பர நி இல ஏழு, (பர நி இல 7) எல்லைகிழக்கு சுப்பர் பெண்தெய்வானைக்குரியவாதனம். வடக்கு கதிரிப்பிள்ளை பெண் தெய்வானை கருரியவாதனம். மேற்கு சுப்பர் கதிரிப் பிள்ளைக்கும் பங்காளர் கட்குமுரியவாதனம். தெற்கு பெரியதம்பி தம்பிமுத்துவிற்குரிய வாதனம். இதடங்கலும்.

2 ஷெ சிறுப்பிட்டியி றை 'மலாயன்சீமா' பர, நீ. இல. நாலு பர, நீ, இல. 4) எல்லை கிழக்கு வினைவார் சின்னத்தம்பிக்குரியவாதனம் வடக்கு கந்தையாசரவண முத்துவிற்குரியவாதனம் மேற்கு கனகசபை பெண் தெய்வானைப் பிள்ளைக்குரிய வாதனம். தெற்கு சுப்பர் கார்த்திகேசுவிற்குரியவாதனம். இதடங்கலிற் சொரியலாய் 1/4 பாகம்,

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.
1964ம்ஞூ ஆடி மீ 14-ம் திகதி
காரைநகர்,
M. 132 8-8-64.

யாழ்ப்பாணம்

# —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைநகர்
செல்லையா நவரத்தினத்தின் மகள் சுசீலா, இவசிறு பராயம், இவவின் பராபரிப்புக்காறர் செல்லையா நவரத்தினம்
—வழக்காளி

இல. M,B, 5644.

எதிராக

காரைநகர் மேற்கு
நாகமுத்து ஆறுமுகம்
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 5644-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக கப்படும் 3 துண்டுக் காணிகளை 1964-ம்ஞூ புரட்டாதிமீ 12உ சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 14874-ம், 13-5-63 தொடக்கம் 28-11-63 வரைக்கும் ரூபாய் 10,000-க்கு 10வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச செலவு ரூபாய் 439/09 சதம்.

ஆதன விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக்தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று காரைதீவு மேற்கிறை "குறிஞ்சிலித்தல்வு" நில. பரப்பு 6½. பனைகளும், வடலிகளும், வான்பயிர் செய்பயிர் வகைகளும், வீடுகளும், கிணறும், எல்லை கிழக்கு பொன்னம்பலம் கைம்பெண் தெய்வானை, கார்த்திகேசு ஆறுமுகத்தின் ஆதனம், வடக்கு கார்த்திகேசு முருகேசுவின் ஆதனம், மேற்கு கார்த்திகேசு முருகேசு, எதிராளியும் தில்லையம்பலத்தின் பெண் சிதம்பரத்தின் ஆதனங்களும், தெற்கு தில்லையம்பலத்தின் பெண் சிதம்பரத்தின் ஆதனமும் ஒழுங்கையும், இந்த ஆதனத்தில் பிரிககப்படாத பங்குகள் 37/40.

2. தங்கோடை தற்போது காரைதிவு மேற்கு "குறிஞ்சிலிததல்வு நம்பவளை விக்கிர மகாதேவன் மணல் பேரன்பிட்டியும் பண்டத்தெருப்பன்புலமும்" நில. பரப்பு 27, இதில் நிலப்பரப்பு 13½. தெற்குப்பககமாய் வீற்றபின் தவிர்தது மீதி நிலப்பரப்பு 13½. இதில் பனைகளும் வான் பயிர் செய்பயிர் வகைகளும். எல்லை கிழக்கு மேற்குறிப்பிட்ட ஆதனம், வடக்கு எஸ். கே. முருகேசுவின் ஆதனம், மேற்கு குமாரவேலு கதிரவேலுவின் ஆதனம், தெற்கு தில்லையம்பலத்தின் பெண் சிதம்பரத்தின் ஆதனம். இவ்வாதனம் முழுவதுக்கும் கிழக்குப்பககமாய் இருக்கும் ஒழுங்கையிலிருந்து தெற்கு எல்லைப்பக்கமாய் குமாரவேலுவின் ஆதனத்திற் கூடாகப் போகும 8 முளம் அகலமான வண்டிப் பாதை உரிமையும், ஆனல் இவ்வாதனத்திற்குத் தெற்கு, கிழக்குப்பககமாய் குமாரவேலுவின் ஆதனத்திலிருந்து போகும் 8 முள அகல வண்டிப்பாதை உரித்து நீங்கலாக.

3, தங்கோடை தற்போது காரைதிவு மேற்கு "சச்சம்பிட்டி" நிலப்பரப்பு 7½. எல்லை கிழக்கு ஆறுமுகம் பெண் இலெட்சுமியும் அருணசலம் வேலுப்பிள்ளையின் ஆதனம், வடக்கு முலலிங்கம் பெண் சிதம்பரத்தின் ஆதனம், மேற்கு பொன்னம்பலம் நாகலிங்கமும் பங்காளர்களின் ஆதனம், தெற்கு ஆறுமுகம் கந்தையாவின் ஆதனம். இந்த ஆதனத்தில் பிரிக்கப்படாத பங்கு 4/5.

வே. கோபாலபிள்ளை,
கொம்மிஷனர்&விலைமதிப்பாளர்,
22, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
25-7-64.
M 128 7-8-64.

## சைவப்புலவர் பரீட்சை - 1964

—0—

1964-ம்ஆண்டு சைவபரிபாலன சபையார் நடாத்தவிருக்கும் மேற்படி பரீட்சை விண்ணப்பகாரர் பலர் வேண்டுகோட்படி கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண பரீட்சை முடிந்ததும் 1964-ம் ஆண்டு செப்டம்பர்மாத முற்பகுதியில் நடாத்தப்பெறுமென பரீட்சார்த்திகளுக்கு அறியத்தருகின்றோம்,

பரீட்சைக் காரியதரிசி,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம்.

## பிழை திருத்தம்

24-7-64-ல் பிரசுரித்த 2570 இல வழக்கு கோட்டு விற்பனவு விளம்பரத்தில் 1964-ம் ஆண்டு ஆகஸ்டு (ஆவணி) மாதம் 28-ம் திகதி (28-8-64) சனிக்கிழமை என்பதை, வெள்ளிக்கிழமை எனக்கொள்க.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
ஊர்காவற்றுறை, கரம்பன், சுருவில் V. மாணிக்கம் கை. பெ, யோகம்மா.
இல. M. B, 2564.
— வழக்காளி

எதிராக

1 ஊர்காவற்றுறை சரவணை, P ஆறுமுகம் கை. பெ. கண்மணி,
2 ஷெ ஆறுமுகம் வெற்றிவேலு
3 ஷெ இராசையா இலட்சுமணபிள்ளையும்,
4 ஷெ பெண் இலட்சுமியும்
எதிராளிகள்

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டின் M B. 2464-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் மூன்று தண்டுக் காணிகளை 1964 ஞூ புரட்டாதி மீ 5 உ (5-9-64) சனிககிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 3000/- இதில் ரூபா 1500 க்கும் 17-11-58 தொடக்கம் 12-5-59 வரைக்கும் 100-க்கு 15 வீத வட்டியையும், அதன்பின் முழுத தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 263-61 அதாவது செலவழித்த ரூபா 186-21 வெலியாத்துச் செலவு 47-05 வரும் செலவு 30-35 இதில் ரூபா 500 கோட்டில் கட்டப்பட்டது.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் திவுப்பகுதி ஊர்காவற்றுறையுக் கோயிற்பற்று 'சரவணை யிறை 1 குமிழந்தனை வயலும் கலடும் குமிழந்தனை மேற்கும் கலடும் நெ, பர. 18 குளி 4¾ இதில் கிழக்குப் பக்கமாக நெ, பர. 3 குளி 4 3/4 நாலே மூக்கால் எல்லை கிழக்கு குருநாதர் வேலுப்பிள்ளையின் ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு எங்களில் 4-ம் பேரின் ஆதனம், தெற்கு குருநாதி ஆறுமுகத்தினுதனம் இதடங்கலும், இன்னும் மேற்செல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றிலிதற்குரிய தண்ணீர்ப் பங்கும் இறை வாய்க்காற் பாவிப்புரித்தும், இது C 276/4ம் இலக்கத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட காணிப்பதிவலுவலகத்தில் பதியப்பட்டது

2 ஷெ மேற்படி கரம்பனிறை பொத்தன் தணுவிலும் ஆலடியிற்தணுவிலும் காக்கையன் தணுவிலும் நில. பர. 6 கிணறும் எல்லை கிழக்கு பொன்னையா கந்தையாவினுதனம், வடக்கு சின்னததம்பி கந்தப்புவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், மேற்கு ரோட்டு, தெற்கு சின்னையா தில்லையம்பலத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் 2/3 மங்கு. மூன்றில் இரண்டு பங்கு. ஆனல் இக்காணியின் தெற்கெல்லை யருகாக கிழக்கெல்லைக் காணிக்குப் போக்குவரவு செய்யும் வழிப் பாவிப்புரித்தும் பிறநீங்கல், C/225 இலககத்தில் யாழ்ப்பாண மாவட்ட காணிப் பதிவலகத்தில் பதியப்பட்டது.

3 ஷெ இறை பொத்தன் தணவிலும் ஆலடியிற் தணுவிலும் காக்கையன் தணுவிலும் நில பர 8¼ எட்டேகால் எல்லைகிழக்கு சின்னையா தில்லையம்பலத்தினுதனமும் எங்களுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும் வடக்கு சின்னததம்பி கந்தப்புவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு பொன்னையா கந்தையாவினுதனம், தெற்கு சின்னையா தில்லையம்பலத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலிற் சொயயலாய் 2/3 பங்கும் இன்னும் இக்காணியிலிருந்து ரோட்டுக்கு மேற்கெல்லைக் காணியில் இருந்து மேற்கெல்லைக் காணியினதும் தெற்கெல்லையருகாகப் போக்குவரவு செய்யும் வழிப்பாதையுரித்தும் இது C 225/32-ம் இலக்கத்தில் யாழ்ப்பாண மாவட்ட காணிப்பதிவலகத்தில் பதியப்பட்டது.

க. சுப்பிரமணியம்
கொம்மிஷனர்,
24-ம் கம்பர், 1-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்,
16-7-1964.
M. 135 7-8-64.

## மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு தானஞ் செய்வாரிற் றலை.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் [illegible] யம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 7-8-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org